| | | | |
|---|---|---|---|
| Headline | **HIV for 90,000 people** | | |
| Date | **24 May 2011** | Language | **Tamil** |
| MediaTitle | **Tamil Nesan** | Page No | **1,16** |
| Section | **News** | Article Size | **146 cm$^2$** |
| Journalist | **N/A** | Color | **Full Color** |
| Frequency | **Daily** | ADValue | **672** |
| Circ / Read | **45,000 / 124,000** | PRValue | **2,017** |



# நாட்டில் 90,000 பேருக்கு எச்ஐவி

**கோத்தாபாரு, மே 24-**
இந்நாட்டில் கடந்த 25 ஆண்டுகளில் 91 ஆயிரத்து 362 பேர் எச்ஐவி நோய்க் கிருமிகளால் பீடிக்கப்பட்டுள் ளனர். இவர்களில் 16 ஆயிரத்து 352 பேருக்கு எய்ட்ஸ் கண்டிருப்பது உறுதிப்படுத்தப் பட்டுள்ளதாகக் கூறப் பட்டது.

நாட்டில் முதன் முதலாக கடந்த 1986ஆம் ஆண்டு எச்ஐவி நோய்க் கிருமிகள் அடையாளம் காணப் பட்டன.

அவ்வகையில் கடந்த 25 ஆண்டு களில் 12 ஆயிரத்து 943 பேர் இந் நோய்க் கிருமிகளால் உயிரிழந் திருப்பதாக மலேசிய எய்ட்ஸ் அறவாரியத்தின் தலைவர் பேராசிரியர் டாக்டர் அடிபா கமாருல்சாமான் தெரிவித்தார்.

**16ஆம் பக்கம் பார்க்க...**

## நாட்டில் 90,000 பேருக்கு எச்ஐவி...

*முதல் பக்கத் தொடர்ச்சி*

எச்ஐவி மற்றும் எய்ட்ஸுக்கு எதிராக கடந்த 2001ஆம் ஆண்டு முதல் அரசாங்கம் இலவச சிகிச்சையைத் தொடங்கியுள்ளது. எனினும், சுமார் 12,000 நோயாளிகள் மட்டுமே சிகிச்சை பெற விரும்புகின்றனர் என்றார்.

"எச்ஐவி மற்றும் எய்ட்ஸ் என்பது மரணத்தைக் கொண்டு வரக்கூடியது என்ற அளவில் மட்டுமே பொது மக்கள் அறிந்து வைத்திருக்கக் கூடாது. ஆனால், இதற்கு இப்போது சிறந்த பலனளிக்கக்கூடிய சிகிச்சை உண்டு . இதன் வழி நோயாளிகளின் ஆயுள் 30 முதல் 40 ஆண்டுகள் வரை நீடிக்கும்" என்று அடிபா குறிப்பிட்டார். "இந்த சிகிச்சையால் இந்த நோய்க் கிருமிகளை 100 விழுக்காடு அழித்துவிடலாம் என்று நம்மால் கூற முடியாது. ஆனால், இதனை மேற்கொள்வதன் வழி நோய்க்கிருமிகள் தாக்கப்படுவதை 96 விழுக்காடு குறைக்கலாம்" என்றார். அடிபா முன்னதாக கிளந்தானில், எச்ஐவி மற்றும் எய்ட்ஸ் மீதான பயிற்சி நடத்துநர்களுக்கான பட்டறையில் கலந்து கொண்டார். இதனை மலேசிய இஸ்லாமிய மேம்பாட்டு இலாகா தலைமை இயக்குநர் ஒத்மான் முஸ்தாபா தொடக்கி வைத்தார்.